பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
11 06 2025 12 40
புதன்கிழமை பிற்பகல்

ஆகாஷவாணி <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டில், வருங்காலத்திற்கு ஏற்ற கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பெரும் ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக பிரதமர் திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- கடந்த 11 ஆண்டுகளில் நாடுமுழுவதும் தேசிய நெடுஞ்சாலைகள் 60 சதவீதம் அதிகரிக்கப்பட்டு இருப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு.நிதின் கட்கரி கூறியுள்ளார்.

- Axiom-4 விண்கலத்தின் பயணம் இரண்டாவது முறையாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

- குழந்தை தொழிலாளர் இல்லாத நிலையை உருவாக்க பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

- ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா - அர்ஜென்டினாவை எதிர்கொள்கிறது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

நாட்டில், வருங்காலத்திற்கு ஏற்ற கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பெரும் ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக பிரதமர் திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கட்டமைப்பு வளர்ச்சி குறித்த மைகவ் சமூக வலைதளப் பதிவை பகிர்ந்துள்ள பிரதமர், நிலைத்தன்மை மற்றும் தொலைநோக்குப் பார்வையுடன் கூடியதாக, இந்த கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறியுள்ளார். இத்தகைய வசதிகள், சுய-சார்பு இந்தியாவிற்கு அடித்தளமிடுவதாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 11 ஆண்டுகளில் கட்டமைப்பு வசதியில் பெரும் புரட்சி ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், புதிதாக ஏற்படுத்தப்படும் தலைசிறந்த கட்டமைப்பு வசதிகள், இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தை மேம்படுத்தி இருப்பதாகவும் தெரிவிதுதுள்ளார். ரயில்வே, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் என, நாட்டின் கட்டமைப்பு வசதிகள்

பெருமளவு மேம்படுத்தப்பட்டு, வாழ்க்கையை எளிதாக்கும் நடைமுறைகள் ஊக்குவிக்கப்படுவதுடன், வளம் சேர்க்கப்படுவதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

மைகவ் இணையதளம் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டில் இயங்கிவரும், கார், பேருந்துகள் மற்றும் ரயில்களைப் பார்க்கும்போது, கடந்த 11 ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்டுள்ள உண்மையான மாற்றத்தை அறிந்துகொள்ள முடிவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்பு, நமது கனவாக இருந்த கட்டமைப்பு திட்டங்கள், தற்போது நனவாகி இருப்பதுடன், பெருமளவு முன்னேற்றம் அடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதமரின் தொலைநோக்குப் பார்வையில், புதிய இந்தியா உருவாகி வருவதாகவும் அந்தப் பதிவில் கூறப்பட்டுள்ளது.

>><><><<

மகான் கபீர்தாசரின் பிறந்த நாளையொட்டி, பிரதமர் திரு.நரேந்திர மோடி அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சமூக நல்லிணக்கத்திற்காக, தமது வாழ்நாளை அர்ப்பணித்தவர் கபீர்தாசர் என்று குறிப்பிட்டுள்ளார்.

எளிமையான அவரது எழுத்துகள், உணர்வுப்பூர்வமானவை என்பதால், நாட்டு மக்களின் மனதில் அவை ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சமூகத்தில் நிலவிய தீமைகளை அகற்றுவதில், மகான் கபீர்தாசரின் பங்களிப்பு எப்போதும் நினைவுகூறத்தக்கது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

>><><><<

பிரதமர் திரு.நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில், நாட்டின் கட்டமைப்பு வசதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றம் ஏற்பட்டுள்ளதாக, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரி கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், கடந்த 11 ஆண்டுகளில், பாரத்மாலா திட்டத்தின்கீழ் 18 ஆயிரத்து

தொள்ளாயிரத்து 26 கிலோமீட்டர் தொலைவுக்கு புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தேசிய நெடுஞ்சாலைகளும் 2014-ல் இருந்ததைவிட 60 சதவீதம் அதிகரிக்கப்பட்டு, தற்போது ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 204 கிலோமீட்டர் அளவிற்கு உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 46 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில், 35 பல்வகை சரக்குப் போக்குவரத்து பூங்கா-க்கள் அமைக்கப்படுவதன் மூலம், சரக்குப் போக்குவரத்தில் புரட்சி ஏற்பட்டுள்ளதாகவும் மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அடல் சுரங்கப்பாதை முதல் Chenab ஆற்றுப் பாலம் வரை, பொறியியல் அதிசயங்கள் உருவாக்கப்பட்டிருப்பது, நவீன, போக்குவரத்து இணைப்பு வசதி பெற்ற, நம்பிக்கை மிகுந்த இந்தியாவை பிரதிபலிப்பதாக உள்ளது என்றும் திரு.நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

>><><><><<

தீவிரவாதத்தை எதிர்த்து போரிடுவதில் இந்தியாவுக்கு ஐரோப்பிய யூனியன் உறுதியான ஆதரவு தெரிவித்திருப்பதற்காக வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

தமது பெல்ஜியம் மற்றும் லக்ஸம்பர்க் பயணத்தின் போது, ஐரோப்பிய யூனியன் தலைவர் Ursula Von Der Leyen -ஐ சந்தித்துப் பேசிய போது பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு வன்மையான கண்டனம் தெரிவித்ததற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டதாக திரு ஜெய்சங்கர் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

>><><><><<

ஷெட்யூல்டு வகுப்பு, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில், மாணவர்களுக்கான உதவித் தொகை கிடைக்காததால் அவர்களது உயர்கல்வி வாய்ப்பு பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று இந்த வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களின் விடுதிகளில் தரத்தை மேம்படுத்துவதுடன் நூலகம் மற்றும் இணையதள வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் திரு ராகுல்காந்தி தமது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

>><><><><<

தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் திரு எல் முருகன் நாமக்கல் மாவட்டத்தில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

முன்னதாக இன்று காலை அவர், பரமத்திவட்டம், புதுப்பாளையம் பகுதியில் அமைந்துள்ள நந்தகோபாலசுவாமி திருக்கோயில், மதுரைவீரன் சுவாமி கோயில்களில் வழிபாடு செய்தார்.

>><><><><<

தமிழகத்தில் குழந்தை தொழிலாளர்கள் இல்லாத நிலையை உருவாக்க பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

உலக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தையொட்டி அவர் வெளியிட்டுள்ள செய்தியில், ஐநாவின் ஒரு அங்கமான பன்னாட்டு தொழிலாளர் அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட இந்நாள், குழந்தை தொழிலாளர் முறைக்கு எதிராக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கடைபிடிக்கப்படுவதாக கூறியுள்ளார்.

சமுதாயத்தின் எதிர்கால முன்னேற்றம் இன்றைய குழந்தைகளை சார்ந்துள்ள நிலையில் அவர்களை குழந்தை தொழிலாளர்களாக பயன்படுத்துவது சட்டத்திற்கும் மனிதாபிமானத்திற்கும் எதிரானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகளின் அறிவை வளர்த்து அவர்களின் திறமைகளை மேம்படுத்தி சிறந்த குடிமக்களாக உருவாக்க வேண்டியது நம் அனைவரது கடமை என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனவே, குழந்தைகளை வேலைக்கு அனுப்பாமல் அவர்களை பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்றும் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

>><><><<

விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டி அருகே உள்ள கரிசல்குளம் பகுதியில் செயல்பட்டு வந்த தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். ஐந்து பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்து தொடர்பாக ஆலை நிர்வாகிகள் இரண்டு பேர் கைது செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><<

## Axiom-4 விண்கலத்தின் பயணம், இரண்டாவது முறையாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா மற்றும் அமெரிக்கா, உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 4 விண்வெளி வீரர்களை சுமந்து செல்லும், Falcon-9 ராக்கெட், நேற்று விண்ணில் செலுத்தப்படுவதாக இருந்த நிலையில், மோசமான வானிலை காரணமாக இன்றைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில், ராக்கெட்டின் திரவ ஆக்ஸிஜன் கலனில் ஏற்பட்ட பழுது காரணமாக, விண்கலத்தின் பயணம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பழுது சரிசெய்யப்பட்ட பிறகு, விண்கலம் செலுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆக்ஸியம் மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிபுனர்களை இஸ்ரோ தொடர்பு கொண்டிருப்பதாகவும், பழுது சரிசெய்யப்பட்டு, விண்கலத்தை செலுத்துவதற்கு முன்பாக, தேவையான பரிசோதனைகளை மேற்கொண்ட பிறகே, விண்ணில் செலுத்தும் தேதியை நிர்ணயிப்பது என முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் இஸ்ரோ தலைவர் திரு.நாராயணன் தெரிவித்துள்ளார்.

>><><><><<

மங்கோலியாவில் நடைபெறும் பன்னாட்டு கூட்டு ராணுவப் பயிற்சியில் இந்திய ராணுவம் பங்கேற்கவுள்ளது.

Khaan Quest என்ற பெயரில் வரும் 14 ஆம் தேதி தொடங்கி இம்மாதம் 28 ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

22 ஆவது ஆண்டாக நடைபெறும் இந்த பயிற்சியின் போது பல்வேறு நாடுகளின் ராணுவப் படைகளுக்கு இடையேயான செயல்திறனை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு பயிற்சி மேற்கொள்ளப்படும் என இந்திய ராணுவம் தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளது.

>><><><<

ஜம்மு கஷ்மீரின் சம்பா மாவட்டத்திற்கு உட்பட்ட எல்லைப் பகுதி மக்களுக்கு பாதுகாப்பு தொடர்பான சிறப்பு பயிற்சி முகாமுக்கு எல்லைப் பாதுகாப்புப் படை ஏற்பாடு செய்துள்ளது.

ராம்கர் பகுதியைச் சேர்ந்த கிராமப் பாதுகாப்பு படையினருக்கு ஆயுதங்களை கையாளும் திறனை மேம்படுத்துதல், எல்லைப்புற நிலவரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை முறியடிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படுவதாக எல்லைப் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

>><><><<

விளையாட்டுச் செய்திகள்

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா - அர்ஜென்டினாவை எதிர்கொள்கிறது.

Amstelveen -ல் இப்போட்டி மாலை மணி 6.30க்கு தொடங்குகிறது.

----------

உலகக்கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் இளவேனில் வாலறிவன் வெண்கலப்பதக்கம் வென்றார்.

முனிச் நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 10 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-1, 6-4 என்ற செட் கணக்கில் சீனாவின் **Yuquan Jin-** ஐ வென்றார்.

இப்போட்டியில் சித்தார்த் விஸ்வகர்மா, சித்தார்த் ராவத் ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

-----------

Santo Domingo சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சஹஜா யமளப்பல்லி - ஜப்பானின் ஹிரோகோ க்வாட்டா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---------

பெல்ஜியத்திற்கு எதிரான இரண்டாவது மகளிர் ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் 2-1 என்ற கோல்கணக்கில் இந்தியா வெற்றி பெற்றது.

-----------

தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் கோவை - மதுரை அணியை எதிர்கொள்கிறது.

**>> End of News <<**